THE HON. THIRU P.U. SHANMUGAM: There is a High Power Committee to look after all these things. I hope they will look after them.

THIRU B. VENKATASWAMY: According to the statement given by the Hon. Minister for Revenue, it is stated that Dharmapuri is a chronically drought-affected area. May I know whether this Government will ask the Central Government to declare Dharmapuri District permanently as a drought affected area?

THE HON. THIRU P. U. SHANMUGAM: Dharmapuri is more or less a permanent drought affected area. Dharmapuri people are lucky enough to note that it has been included in the Fourth Plan. Ramanathapuram district is deleted. They are unlucky.

திரு. த. சோனையா: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்ள மத்திய அரசு சம்மதித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். மிகவும் வறட்சியாக இருக்கக் கூடிய இராமநாதபுரம் மாவட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நமது அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களையும் எடுத்துக் கொண் டிருந்தார்கள். ஐந்தாவது திட்டத்தில்தான் இராமநாதபுரத்தை நீக்கி விட்டார்கள். இராமநாதபுரத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தான் அரசு சார்பில் சொன்னேம்.

Industrially backward areas

*545 *Q*.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the areas in Tamil Nadu which are declared as backward areas; and

(*b*) the amount of financial assistance given by the Central Government for the backward areas during the period from 1967–1971?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 277–296-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, I understand that the Government of India have chosen 5 taluks in Dharmapuri District, namely, Dharmapuri, Hosur, Krishnagiri, Uthangarai and Harur taluks and given 10 per cent subsidy. Regarding power tariff, may I know from the Hon. Minister why these taluks have not been included in the power concession? It has been stated on page 9 of the statement that for new industries to be set up in any of the 40 backward taluks indicated therein will be given a further reduction of 15 per cent power tariff, in addition to the concessions specified in paragraph 1 of the statement. The taluks of Hosur, Dhenkanikota Uthangarai and Harur taluks have not been included in the statement. May I know from the Hon. Minister . . .

DEPUTY SPEAKER : Why such a long question?

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Industries whether these taluks will be included under backward areas and given concessional power tariff?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி தனியாகப் பிரச்சினை எழுப்பப் பட்டால் பரிசீலிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : டென் பர்சென்ட் சப்சிடி ஸ்கீமின் கீழ் உசிலம்பட்டி, திருமங்கலத்திற்கு எவ்வளவு தரப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இந்தப் பகுதி இந்த ஆண்டுதான் சேர்க்கப்பட்டிருக்கிறது. இனிமேல்தான் அதைப் பற்றிய பிரச்சினை எழும்.

திரு. ஏ. எம். இராஜா : பிற்பட்ட மாவட்டம் என்றால் அந்த மாவட்டத்தில் உள்ள ஒருசில பகுதிகளுக்குத்தான் இந்த டென்பர்சென்ட் சப்சிடி ஸ்கீம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது அந்த மாவட்டங்கள் பூராவுக்கும் விஸ்த ரிக்கப்படுமா? மின்சாரக் கட்டணச் சலுகையும் அளிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பின் தங்கிய மாவட்டங்கள் அனைத்துக் கும் அந்தச் சலுகை உண்டு. பின் தங்கிய மாவட்டம் என்பதாக ஒன்றுக்கே இருக்கக் கூடாது என்று மாவட்டங்களைச் சுற்றிய பல பிற்பட்ட பகுதிகளை டிராக்ஸ்—எடுத்து அது இராமநாதபுரம், மதுரை, திருச்சி ஆகியவற்றுக்கு வந்தது.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, இந்த பின்தங்கிய மாவட்டங்கள் என்று எடுக்கப்பட்டிருக்கிற வட்டங்களில் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒரு வட்டம் கூட எடுக்கப்படவில்லை. திருத்தணி வட்டம் இருக்கிறது, பொன்னேரி வட்டம் இருக்கிறது, மதுராந்தகம் போன்ற வட்டங்கள் பின்தங்கியதாக இருக்கின்றன. சென்னையைச் சுற்றியுள்ள இவ் வட்டங்களில் தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தினால் இந்த வட்டங்கள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில மாவட்டங்கள் முழுமையாக பின் தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் சிலசிலப் பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. நாம் எடுத்த முடிவின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பின் தங்கிய பகுதி என்று இல்லாமல், கோர்வையாக, 'கன்டிகுவஸ்' ஆக உள்ள பின்தங்கிய வட்டங்களை மத்திய அரசினர் கேட்டிருக்கிறார்கள். ஆகவேதான், இதை எடுத்து இருக்கிறோம். செங்கற்பட்டில் சில பகுதிகள் பின்தங்கியிருந்தாலும், பெரும் பகுதிகளில் ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கிற காரணத்தினாலே, மத்திய அரசினுடைய குறிப்புகள், 'பிரின்சிபில்ஸ' ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படு கின்றன, எந்தப் பகுதியும் ஒதுக்கப்படவில்லை.

Bristle Fibre Unit at Tenkasi

*546 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to market the products of the Bristle Fibre Unit, Tenkasi?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தென்காசியிலுள்ள நுண்கயிறு நாறு தயாரிக்கும் நிறுவனத்தில் தயாராகும் கலவையான கயிறுநாறு தற்சமயம் அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்குத் தேவையான மெத்தை விரிப்புகள் தயார் செய்ய விற்கப்படுகிறது. மெத்தை விரிப்புகள், ரப்பர் நாறு மற்றும் கயிற்றுப் பொருட்கள் தயார் செய்யும் நிறுவனங்களும் தொழில் கூட்டுறவு சங்கங்களும் இதை வாங்குகின்றன.

திரு. என். டென்னிஸ் : இதன் உற்பத்திக்காகப் பல சலுகைகள் கொடுப்ப தாகத் தெரிகிறது. ஆனால், அதன் விற்பனை அதிகரிப்பதற்காக அரசு தீவிர நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அதற்காக, தீவிர நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?